கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 18/2017

பிரதிவாதி தரப்பு சாட்சி -2 செந்தமிழ்செல்வி திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 08.04.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தமிழ்செல்வி | கிராமம் | |
| த/பெ | ராஜகோபால் | தொழில் | காவல் ஆய்வாளர், மாவட்ட குற்ற பிரிவு, கரூர் |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | |

**பி.சா.2- செந்தமிழ்செல்வி- முதல் விசாரணை**

1. எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. நான் தற்சமயம் கரூர் மாவட்ட குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். காவல் நிலைய குற்ற எண்.1/2017 வழக்கு சம்ந்நதமாக வழக்கு கோப்புகளை நான் எடுத்து வரவில்லை. இந்த குற்ற எண் சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையின் சான்றிட்ட நகல்களை குளித்தலை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1 லிருந்து பெறப்பட்டு இவ்வழக்கில் தாக்கல் செய்கிறேன். மேற்சொன்ன குற்ற எண் சம்மந்தமாக சாட்சிகளை விசாரித்து அவர்களிடமிருந்து பெறப்பட்ட Cr.P.C 161 வாக்குமூலங்களை தாக்கல் செய்யவில்லை. ஆனால் அவை அனைத்தும் CCTNS ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. குற்ற எண்.2/2017 வழக்கு சம்மந்தமாக பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, இறுதி அறிக்கை, சாட்சிகளிடமிருந்து பெறப்பட்ட Cr.P.C 161 வாக்குமூலங்கள் ஆகியன CCTNS ல் தான் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன இரு குற்ற எண்கள் சம்மந்தமான வழக்கு கோப்புகள் எங்கள் காவல் நிலையத்தில் பலமுறை தேடியும் கிடைக்கப்பெறவில்லை என்பதை தெரியப்படுத்தும் விதமாக, கரூர் மாவட்ட குற்ற பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய என்னால் இந்நீதிமன்றத்தில் சமப்பிக்கப்படும் கடிதத்தினை இதன் மூலம் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணங்கள் **பி.சா-ஆ-12 மற்றும் பி.சா-ஆ-13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. மேற்கண்ட நடைமுறைகள் ஆய்வாளர் ராஜ்மோகன் மற்றும் ஆய்வாளர் அம்சவேணி ஆகியோர் பணியில் இருக்கும் போது நடை பெற்றவை. மேற்கண்ட இரு குற்ற எண்கள்

சம்மந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு 18/2017 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்ததால் குற்ற எண்.1/2017 யை பொறுத்து 29.09.2017 அன்றும், குற்ற எண்.2/2017 யை பொறுத்து 07.12.2017 அன்றும் காவல் நிலையத்தில் வைத்து முடிக்கப்பட்டன. பொதுவாக ஒருவர் மோசடி செய்து வேறு நபரது சொத்தை அபகரித்தால் அந்த மோசடி செய்த நபர் மீது இந்திய தண்டனை சட்டத்தின் படி குற்ற நடவடிக்கை எடுக்கப்படும். பி.சா.ஆ.9 மற்றும் பி.சா-ஆ.10 ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் இருந்து தான் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் அதில் காவல் ஆய்வாளர் என்ற முறையில் காவல் ஆய்வாளர் செய்துள்ள கையொப்பம் பற்றி எனக்கு தெரியாது. மேலும் அதில் மாவட்ட குற்ற பிரிவின் முத்திரை அதில் இல்லை. மேற்படி பி.சா.ஆ.9 மற்றும் பி.சாஆ-10 ஆவணங்கள் CCTNS ல் பதிவேற்றம் செய்யப்படாது.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court, read over and interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**